**உடுபத்தாவ பிரதேச சபை – 2022**

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடுபத்தாவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து உடுபத்தாவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது காணி மற்றும் கட்டிடங்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,877,452 பெறுமதியான நிர்மாணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் குறைபாடுகள் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 440,550 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் ரூபா 134,775 பெறுமதியான இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் ரூபா 324,350 பெறுமதியான தளபாடங்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | ரூபா 195,000 தொகையான 04 காணிகளின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது காணிகள் மற்றும் கட்டிடங்களின் நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்குமிடையே ரூபா 4,589,509 வித்தியாசம் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 02 ஆண்டுகளுக்கு மேல் காணப்பட்ட ரூபா 719,299 தொகையான வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | கையில் நிறுத்தி வைத்துள்ள ரூபா 163,337 பணத்தை வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 19,816,376 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 12,040,903 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீத வரியும் வரியும் | 3,624 | 2,296 | 2,072 | 224 | 3,446 | 4,083 | 2,258 | 1,825 |
| (ii) | வாடகை | 1,356 | 12,137 | 11,313 | 824 | 12,301 | 7,395 | 6,710 | 684 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 13,563 | 873 | 873 | - | 1,041 | 891 | 891 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,181 | 58,858 | 48,601 | 10,257 | 62,444 | 39,176 | 4,618 | 34,557 |
| | மொத்தம் | 20,724 | 74,164 | 62,859 | 11,305 | 79232, | 51,545 | 14,447 | 37,066 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,198,764 தொகையான மொத்த நிலுவையான வீத வரி மீதியினுள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவைப் பெறுமதி ரூபா | நிலுவையான வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வீதவரியினை முறையாக அறவீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1,567,357 மற்றும் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்குமிடையில் நிலுவையாக இருந்தா பெறுமதி ரூபா 2,059,995 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | | |
| **(ஆ) ஏக்கர் வரி**<br>2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 93,179 அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏக்கர் வரி செலுத்துகின்ற பல காணிகள் தற்பொழுது ஏனைய நபர்களுக்கு விற்கப்பட்டுள்ளதுடன் இன்னும் சில பகுதிகள் விற்பதற்காக துண்டு போடப்பட்டுள்ளன. | ஏக்கர் வரி முறையாக அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| **(இ) நீதிமன்ற தண்டப் பணமும் முத்திரை கட்டணமும்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 ஏப்ரல் 12 ஆந் தகிதி வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 43,883,364 மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 249,922 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணத்தையும் முத்திரைக் கட்டணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டிலிருந்து அறவிடாது காணப்பட்ட சம்பள மீளளிப்பு பெறுமதியான ரூபா 14,781,431 இனை அறவீடு செய்தல் அல்லது ஏனைய தேவையான நடவடிக்கைகள் எடுக்காது கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளுராட்சி திணைக்களத்திடமிருந்து அப்பணத்தை மீளளிப்புச் செய்வதற்கு முடியாது என காட்டப்பட்டிருந்ததனால் பொது நிதியிலிருந்து தீர்த்துவைப்பதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 11 கணக்கு மீதிகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மீதி ரூபா 110,602,608 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 6,602,342 மீதி காணப்பட்டது. | பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு அடுத்துவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய மீதிகளை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 கணக்கு மீதிகள் தொடர்பாக ரூபா 39,400,708 தொகையான செலுத்த வேண்டிய மீதி காணப்பட்டதுடன் அதனுள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 19,369 கேள்வி வைப்பு மீதியும் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய ரூபா 14,406,189 மீதியும் உள்ளன. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் கடன்கொடுத்தோர் பெறுமதியை தீர்த்து வைப்பதற்கும் கடன்கொடுத்தோர் பெறுமதிக்கு மிகையான ஒதுக்கீடு காணப்படுமாகவிருந்தால் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் பெறுமதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையின் 25 தளபாட உபகரண விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் காலங்களில் பெறுமதியை மதிப்பீடு செய்து பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதிய மீளாய்வு சபை சிபாரிசிற்கு இணங்க 2022 மார்ச் 04 ஆந் திகதி ஏலமிடப்பட்ட தளபாடங்கள், உபகரணங்கள், இயந்திரங்கள், அலுவலக உபகரணங்கள் என்பவற்றிற்கான பெறுமதியை இனங்கண்டு கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்குவைத்தல் வேண்டும். |

## 3.2. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| வீதவரி கட்டணங்கள் அறவிடப்படுகின்ற ஆதனங்களுக்காக 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு | புதிய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான மீளாய்வு | ஆதனங்களை முறைப்படி மதிப்பீடு செய்து முறையாக கட்டணங்களை அறவீடு |

| | | |
|---|---|---|
| அதனை அடிப்படையாகக் கொண்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும் சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கையானது GIS தொழில்நுட்பத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செய்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 9,400,374 தொகையான இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் ரூபா13,384,465 தொகையான தளபாடங்களும் உபகரணங்களுக்கும் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சரியான தகவல்களுடன் செம்மையாக்கி புதிதாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பராமரிக்கப்படுகின்ற 51 மயானங்களுக்கு மத்தியில் 47 மயானங்கள் மற்றும் 06 விளையாட்டு மைதானங்களை சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்களின் உரிமை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பராமரிக்கப்படுகின்ற 47 மயானங்களையும் 06 விளையாட்டு மைதானங்களையும் சபைக்கு ஒப்படைப்பதற்கு உரிய பிரதேச செயலகத்திற்கு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இச்சொத்துக்களை துரிதமாக சபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பயன்படுத்தப்படாத/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையிடம் காணப்படுகின்ற அம்புலன்ஸ் வாகனத்திற்கு பழுதுபார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | அந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக சபையிடம் நிதி ஏற்பாடு இல்லாததனால் அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து 2022 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் அந்த ஆண்டில் நிதி ஏற்பாட்டினை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்கள் சிறப்பாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 1,200,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு செயற்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் ரூபா 5,434,258 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட 10 செயற்திட்டங்களின் வேலைகளட முடிவடைந்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீடு செய்யப்பட்ட நிர்மாண வேலைகளை எதிர்பார்த்தவாறு பூர்த்திசெய்தல் வேண்டும். |

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இரண்டு ஊழியர்கள் தொடர்பான ரூபா 217,020 தொகையான அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி காணப்பட்டது. | இந்த உத்தியோகத்தர்களுக்கு ஊழியர் கடன் நிலுவைப்பணத்தை செலுத்துமாறு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | ஊழியர் கடனை முறைப்படியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 100 மீண்டுவரும் செலவுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 60 சதவீத்தினை விட குறைந்த நிதி ஏற்பாடு மாத்திரம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 10 மூலதன செலவு விடயங்கள் தொடர்பான நிதி ஏற்பாட்டில் 60 சதவீத்தினை விட குறைந்த அளவானவை மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. | 1222/3 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை உரிய செயற்பாடுகளுக்காக செலவு செய்ய முடியாமையும், செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாமையும் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், அத்தியவசியமான செயற்பாடுகளுக்காக செலவு செய்ய வேண்டி ஏற்பட்டமை என்பன காரணமாகும். | நடைமுறைச் சாத்தியமாக பாதீட்டினைத் தயாரிப்பதற்கும் அதனை அடிப்படையாகக் கொண்டு நிதி ஏற்பாட்டினை சிறப்பாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |